*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm07042026.30

# Nandhi Kalambagathil Nandhivarmanin Sirappugal

**S. Govindammal[1*], Dr. KT.Murugesan[2],**
[1]Research Scholar, Department of Tamil, Ganesar College of Arts and Sience, (Affiliated to Bharathidasan University), Melaisivapuri- 622403
[2]Assistant professor and Research Advisor, Department of Tamil, Ganesar College of Arts and Science, (Affiliated to Bharathidasan University), Melaisivapuri- 622403
*Correspondence: govindammal74@gmail.com.

**Article Info**
Received on 20-April-2026, Revised on 22-April-2026, Accepted on 25-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Kalambaka literature has a special place in Tamil literary genres. This song, which consists of various verses and verses, is sung to honor the leader of the song. Considered to be the first of the Kalambaka literatures, Nandikalambagam was sung with Nandivarman III, the ruler of Thondai as the lead singer. It is a tradition that most of the songs that sing about Pataida Thalaivan are set in Pataan Thani. Nandivarman's attributes such as generosity, bravery, and kindness have been extensively discussed in the literature. Since Nandikalambagam is the first book in the genre of Kalambaka literature to appear in Tamil, it can be understood that this literature has also contributed to the emergence of other literatures. Various internal and external departments present in the literature are helpful in enhancing the literary taste. Through the Patan Thani songs featured in Nandikalambaka, we can learn about the merits of Nandivarman III and understand the structure of Patan Thani on the basis of genealogy.

***KEYWORDS:*** *Paadan thinai, kalangam, uruppugal, akam, puram, kodai, veeram.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

# நந்திக்கலம்பகத்தில் நந்திவர்மனின் சிறப்புகள்

[1]**ச. கோவிந்தம்மாள்,** முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த் துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) ,மேலைச்சிவபுரி - 622403

[2]**முனைவர் கதி முருகேசன்,** உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர், தமிழ்த் துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), மேலைச்சிவபுரி - 624031.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வகைகளில் கலம்பக இலக்கியங்களுக்கென்று தனி இடம் உண்டு. பல்வேறு யாப்புகளிலும் பொருண்மைகளிலும் அமையும் இவ்விலக்கியம் பாட்டுடைத் தலைவனைச் சிறப்பிக்கும் நோக்கில் பாடப்பட்டதாகும். கலம்பக இலக்கியங்களில் முதலாவதாகக் கருதப்படும் நந்திக்கலம்பகம் தொண்டை நாட்டை ஆட்சி செய்த மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்பட்டதாகும். பாட்டுடைத் தலைவனைப் பாடும் பாடல்கள் பெரும்பான்மையும் பாடாண் திணையில் அமைவது மரபு. நந்திவர்மனின் கொடை வீரம் இரக்கம் முதலான பண்புகள் இலக்கியத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. நந்திக்கலம்பகம் தமிழில் தோன்றிய கலம்பக இலக்கிய வகையில் முதலாவது நூல் என்பதால் பிற இலக்கியங்களின் தோற்றத்திற்கும் இவ்விலக்கியம் உறுதுணையாக இருந்திருக்கிறது என்பது விளங்கும். இலக்கியத்தில் இடம்பெறும் பல்வேறு அகத்துறைகளும் புறத்துறைகளும் இலக்கியச் சுவையை மிகுவிக்க உதவியாக அமைந்திருக்கின்றன. நந்திக்கலம்பகத்தில் இடம்பெறும் பாடாண் திணைப் பாடல்களின் மூலமாக மூன்றாம் நந்திவர்மனின் சிறப்புகள் பலவற்றையும் அறிந்து கொள்வதோடு மரபிலக்கண அடிப்படையில் பாடாண் திணையில் கட்டமைப்பையும் புரிந்து கொள்ள முடிகிறது.

**திறவுச் சொற்கள்**

பாடாண் திணை , கலம்பகம், உறுப்புகள், அகம் , புறம், கொடை , வீரம

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் கலம்பகம் அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து வரப் பல்வேறு யாப்பு வகைகளில் இலக்கியச் சுவை பயின்று வரப் படைக்கப்பட்ட இலக்கிய வகையாகும். சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்று ஆறனுள் மற்றெந்த இலக்கிய வகையை விடவும் மிகுதியான இலக்கியச் சுவை உடைய இலக்கியமாகக் கலம்பகம் விளங்குகிறது. கலம்பக நூல்களில் முதலாவது நூலாகக் கருதப்படும் நந்திக்கலம்பகம் தொண்டை நாட்டை ஆட்சி செய்த மூன்றாம் நந்தி வர்மனின் சிறப்புகளை எடுத்துக் கூறும் நோக்கில் படைக்கப்பட்டதாகும். பாட்டுடைத் தலைவனைப் பாடும்போது அவனது கொடை வீரம் முதலான பண்புகளைச் சிறப்பிப்பது மரபு. அவ்வகையில் நந்திக்கலம்பகம் நந்திவர்மனின் வீரம் முதலான பண்புகளை

விரிவாகப் பேசுகிறது. இலக்கியத்தை முழுமையாக ஆய்வு செய்வதன் மூலமாக நந்திவர்மனின் சிறப்புகள் பலவற்றையும் அறிந்து கொள்ள இயலும்.

**கலம்பகம் விளக்கம்**

கலம்பகம் தொண்ணூற்று ஆறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று. பல்வேறு மலர்களைக் கொண்டு தொடுக்கப்படும் கதம்பம் என்னும் மாலை போல இவ்விலக்கியம் அகப்பொருளும் புறப்பொருளும் கலந்து வரப் பல்வேறு யாப்புகளைக் கொண்டு கட்டமைக்கப்படுவதாகும். "பல்வகை மலர்களால் தொடுக்கப்பெறும் மாலை போன்று பல்வகைப் பாக்களால் தொடுக்கப் பெறும் பாமாலை ஆகும். கலப்பு + அகம் என கலம்பகம் என்னும் சொல் விரியும். கலப்பு என்பது மெலித்தல் விகாரம் பெற்று கலம்பு என நின்றது. கலம்பக உறுப்பாக அமையும் துறைகள் பலவும் கலத்தலைத் தன்னகத்தே கொண்ட நூல் எனப் பொருள்படும்" (மது. ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.150) என்று கலம்பகத்திற்கு விளக்கம் தருவர். இரா.கண்ணன், "கலம்பக இலக்கியத்தின் கூறுகள் முதன்மை உறுப்புகள் துணைமை உறுப்புகள் என அமையும் "(இரா.கண்ணன் , சிற்றிலக்கிய ஆராய்ச்சி (முதல் தொகுதி ) , ப .248) என்று குறிப்பிடுகிறார். கலம்பக இலக்கியங்களில் பதினெட்டு உறுப்புகள் அமைய வேண்டும் ஆனால் கலம்பக உறுப்புகளை எடுத்துரைப்பதில் இலக்கியங்களுக்குள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பாட எடுத்துக் கொண்ட பொருள் அடிப்படையிலும் கலம்பக உறுப்புகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சிற்றிலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் தமக்குள் கலம்பக உறுப்புகளை வரையறுப்பதில் வேறுபடுகின்றன. பன்னிரு பாட்டியல் பதினான்கு உறுப்புகளையும் வெண்பாப் பட்டியல் பத்தொன்பது உறுப்புகளையும் நவநீதப் பட்டியல் பதினான்கு உறுப்புகளையும் குறிப்பிடுகின்றன. முதல் கலம்பகமான நந்திக்கலம்பகத்தில் பதினேழு உறுப்புகள் இடம் பெற்றுள்ளன.

**பாடாண்திணை விளக்கம்**

பாட்டுடைத் தலைவனின் சிறப்புகளை எடுத்துக் கூறுவது பாடாண் திணையாகும். "ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் / அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று " (புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண், கொளு, 1) என்று புறப்பொருள் வெண்பாமாலை பாடாண் திணைக்கு இலக்கணம் தருகிறது. இத்திணையின் பல்வேறு செய்திகள் துறைகளாக இலக்கண ஆசிரியர்களால் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து பாட்டுடைத் தலைவனின் பல்வேறு சிறப்புகளும் வெளிப்படுகின்றன என்று கூறலாம். பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் பாடாண் திணையின் துறைகளைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉம்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையொடு உளப்படத் தொகை இத்
தொக்க நான்கும் உளவென மொழிப (தொல்.பொருள் . புறத்.29)

**நந்திவர்மன்**

தொண்டை நாட்டை ஆட்சி புரிந்த பல்லவ மன்னர்களின் ஒருவன் மூன்றாம் நந்திவர்மன். தன் வீரப் பண்பாலும் கொடையாலும் சிறந்த மன்னனாக அடையாளம் காணப்பட்டவன். நந்திவர்மனின் புகழ் வீரம் கொடை என்னும் பண்புகள் நந்திக்கலம்பகம் இலக்கியம் முழுமையும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. இலக்கியம் முழுமையும் நந்திவர்மன் பல்வேறு பெயர்களால் சிறப்பிக்கப்படுவதை கதிர் முருகு விளக்குகிறர். "நந்திக்கலம்பகம் இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவன் நந்திவர்மன் நந்தி, அவனி நாராயணன், மல்லைப் புரவலன், தொண்டை வேந்தன், சோணாடன், பல்லவர் கோன், அடலுக்கிரகோபன், மல்லையங்கோன், க ாவிரி வளநாடன், குமரிக் கொண்கன், கங்கை மணாளன், குவலய மார்த்தாண்டன், கச்சி நாட் டோன் , உறந்தையர் கோன், தொண்டைக்கோ , விடேல் விடுகு, தேச பண்டாரி, மானபரன் நந்தி , தமிழாகரன், மல்லை வேந்தன், மயிலைக் காவலன், பல்லவர் தோன்றல், பைந்தார் நந்தி, தென்னவர்கோன், பல்லவன், கஞ்சுகன், செருவென்றோன், கச்சி நாட்டோன், பைந்தார் நந்தி, அங்கநாடன், சந்திர குலப் பிரகாசன், மனக்கினியான், புரவலன், பொன்னி நாட்டு மன்னன், மானோதயன், கோமான், தியாகி, நந்தி சீராமன், தமிழ் நந்தி " ( கதிர்முருகு, திறனாய்வு நோக்கில் நந்திக் கலம்பகம், பக். 20, 21). நந்திக்கலம்பக இலக்கியம் அறம் வைத்துப் பாடப்பட்டது என்பதை சோமேசர் முதுமொழி வெண்பா, தொண்டை மண்டல சதகம் ஆகிய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**புகழ்**

நந்திக் கலம்பக நூலில் நந்திவர்மனின் புகழ் விரிவாகப் பேசப்படுகிறது. நந்திவர்மன் தொண்டை நாட்டை ஆட்சி செய்தவன். தன் வீரத்தால் சோழ நாட்டோடு போர் செய்து வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தவன். ஆற்று நீர் ஊற்று நீர் மழைநீர் மூன்றும் கலந்த கடலையும் வென்று தன்னகப்படுத்தியவன். போர்க்களத்தில் போர் செய்து வெற்றி பெற்ற பின் பெற்ற திறைப்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

பொருள்களைத் தன்னை பணிந்து வணங்கி நிற்பவர்களுக்கு வழங்கும் இயல்புடையவன். அதனால் அவன் கொடைப் பண்பின் காரணமாகவும் வெற்றியால் ஏற்பட்ட சிறப்பின் காரணமாகவும் அவனது புகழ் எங்கும் பரவியிருந்ததை நந்திவர்மனின் அரண்மனையில் உள்ள கடுவாய்ப் பறை பேசுவதாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார்" தொண்டை வேந்தன் சோனாடன் தொன்னீர் அலங்கல் முந்நீரும் / கொண்ட வேந்தர் கோன் நந்தி கொற்ற வாயின் முற்றத்தே / விண்ட வேந்தர் தம் நாடும் / கண்ட வேந்தர் கொண்மின்கள் என்னும் கடுவாயே " (நந்திக்.5) . பாடல்களில் நந்தி அடைந்த புகழ் அரிதானது எனக் குறிப்பிடப்படுகிறது. தெள்ளாற்றில் நடைபெற்ற போர் அவனது மிகுதியான புகழுக்குக் காரணமாக அமைந்ததை அறியமுடிகிறது. "வேற்று நாட்டு மன்னர்களைத் தோற்றோடச் செய்தவன், மண்ணுலகில் வெற்றிகளுக்கு எல்லாம் சாட்சியாக உள்ளவன், தொண்டை நாட்டிற்கு தலைவன், எல்லாப் புகழும் நந்திக்கே தவிரப் பிறருக்கு இல்லை" (மேலது. 49) என்னும் சிந்தனையால் நந்திவர்மன் தான் ஆட்சி செய்த காலத்தில் மிகுதியான புகழோடு விளங்கியவன் என்பது பெறப்படும். பகைவர்களைத் தனக்குக் கீழ் பணியச் செய்யும் ஆளுமைப் பண்பு உடையவனாக விளங்கியதன் காரணமாக அவனுக்கு அச்சம் கொண்டு எண்ணற்ற மன்னர்கள் நாளும் அவனைப் பணிந்து தம்முடைய ஆட்சியைக் காத்துக் கொள்பவர்களாக விளங்கினார்கள். மன்னனுக்கு முடிசூட்டு விழா நடக்கும்போது அந்தணர்கள் யாகத் தீ வளர்த்து மன்னன் புகழோடு விளங்குவதற்காக அறுகம்புல்லைத் தலையில் அணிவிப்பார்கள். இதற்குத் தாளிப்புல் என்னும் பெயரும் உண்டு. அத்தகைய மன்னர்கள் எல்லாம் நந்திவர்மனைப் பணிந்து சிறப்புமிக்க தாளிப் புல் தரையில் படுமாறு வணங்கியதை நூலாசிரியர் பதிவு செய்கிறார். "ஓம மறைவாணர் ஒண்பொற் கழல் வேந்தர் / தாம முடிக்கணிந்த தாளிப்புல் - கோமறுகில் / பாவடிக் கீழ்ப் பல்யானைப் பல்லவர் கோன் நந்திதன் / சேவடிக்கீழ்க் காணலாம் சென்று " (மேலது. 15) நந்திவர்மன் படையெடுத்துச் சென்றால் பகை நாடு அழிவது உறுதி என்னும் சிந்தனை அவன் காலத்தில் நிலவியது. "நந்திவர்மனின் யானைப் படை சினத்தால் கண் சிவந்ததையும் பகைவர் கூட்டத்தை நந்திவர்மன் வென்று ஒழித்ததையும் இலக்கியம் தெளிவுபடுத்துகிறது" (மேலது. 16). தன்னைப் பணிந்து வணங்குபவர்களுக்கு அருள் குணம் உடையவனாகவும் பணியாதவர்களுக்கு அச்சதரும் இயல்பினனாகவும் நந்திவர்மன் விளங்கினான். "நிதி தரும் கவிகையும் நிலமகள் உரிமையும் இவையிவை யுடை நந்தி / மதியிலி அரசர் நின் மலரடி பணி இலர் வானகம் ஆள்வாரே " (மேலது. 17: 3 - 4) உலகில் உள்ள செல்வங்கள் அனைத்தும் நிலப்பரப்பும் உலகில் வாழும் அனைவருக்கும் பொதுவானவை ஆனால் நந்திவர்மன் எல்லோருக்கும் பொதுவானவை என்று இல்லாமல் தனக்கே உரிமையாக்கிக் கொண்ட இயல்புடையவன் என்று நந்திக்கலம்பகம் குறிப்பிடுகிறது. நந்திவர்மன் தன்னுடைய தோள் வலிமையினால் தெள்ளாற்றும் போரில் வெற்றி பெற்றான். "நந்திவர்மனின்

கண்கள் சினத்தால் சிவந்தால் பகைவர்களின் ஊர்கள் தீயினால் சிவப்பு நிறம் பெறும். அவனது புருவம் துடித்தால் தங்களுக்கு வரப்போகும் துன்பத்தை அறிவிக்கும் முகமாக அவனைப் பணியாத மன்னர்களுக்கு இடக்கண் துடிக்கும். நந்திவர்மனின் வாள் உறையிலிருந்து நீக்கப்பட்டால் பகைநாட்டு மன்னர்களின் மனைவியர் மார்பில் அணிந்திருக்கும் முத்தணிகள் களையப்படும். சங்கு ஒலித்தால் பகை அரசர்களின் மனம் துன்புறும். அவனது யானை அலங்கரிக்கப்பட்டால் எதிரில் போர் செய்பவர்களின் உடல் ரத்தம் ஆகும்" (மேலது. 61) என்னும் செய்திகள் நந்திவர்மனின் புகழை மிகுவிக்கும் நோக்கில் இலக்கியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன.

**வீரம்**

நந்திவர்மனின் வீரப் பண்பு குறித்துப் பல்வேறு பாடல்கள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. நந்திவர்மன் அச்சமில்லாத பண்புடைவனாக விளங்கியதன் காரணமாகத் தன்னை எதிர்த்த மன்னர்களை வெற்றி கொண்டு தன்னை ஆதரித்தவர்களையும் தனக்கு பணிந்தவர்களையும் இன்முகத்தோடு நோக்கிப் போரில் பெற்ற திறைப் பொருள்களை வழங்கி மகிழும் குணம் உடையவனாக விளங்கினான். நந்திவர்மனின் புகழைப் புலவர் பாடும் முறையில் அமைந்த பாடல் பகைநாட்டு மன்னர்களின் நிலையை விளக்குவதாக அமைகிறது. "விடுதிர் கொல்லோ வள நாடு உடையீர் அரசற்கு முன்னின்று / இடுதிர்கொள் லோபண்டு இறுக்கும் திறை; எரி கானத் தும்மை / அடுதிர்கொல் லோதிறல் நந்தி எங் கோன் அயி ராவ தத்தில் / படுதிர் கொல் லோபடை மன்னீர் என்னாம் உங்கள் பாவனையே " (மேலது, 12) இப்பாடலில் நந்திவர்மனோடு போர் செய்தவர்கள் தோல்வியால் நாட்டை இழப்பார்கள், பணிந்து நின்று போர் புரியாமல் திறை கொடுப்பார்கள், போரால் தீப்பற்றி எரியும் காட்டுக்குள் சென்று உயிரை விடுவார்கள், நந்திவர்மனின் அயிராவதம் என்னும் யானையால் உயிரிழப்பார்கள் என அமையும் சிந்தனைகள் நந்திவர்மனைப் பகைத்துக் கொண்டால் தோற்பது உறுதி என்பதையும் அவனைப் பணிந்து வணங்கினால் மட்டுமே உயிர் வாழ முடியும் என்பதையும் அறிவிக்கின்றன. "நந்திவர்மன் மிகுந்த படை உடையவனாக விளங்கினான். அவனது வீரத்திற்கு முன்பு பகை அரசர்களின் படை ஒன்றும் செய்ய இயலாது. அவனது புருவம் துடிக்கும் முன்பு பகைவர்களின் அளவு கடந்த படைகள் அழியும் " என்று கதிர்முருகு பல்வேறு அகச் சான்றுகளை எடுத்துக்காட்டி விளக்குவது குறிப்பிடத்தக்கது. (கதிர் முருகு , முற்குறித்த நூல், ப.29) நந்திவர்மனின் வீரத்திற்கு முன்பாக அவனை எதிர் கொள்ள முடியாமல் பல நாட்டு மன்னர்களும் திறைப் பொருள் கொடுத்துப் பணிந்து நின்றதை, "வீர வீர நல் விறல் அவர் கஞ்சுகன் வெறியலூர்ச் செருவென்றோன் / ஆர்வ மா உ ளம் நின்றவர் அன்றிமற் றவன் பெருங் கடை நின்ற / சேர சோழரும் தென்னரும் வடபுலத் தரசரும் திறை தந்த / வீர மாமத கரியிவை பரியிவை இரவலர் கவர்வாரே " (நந்திக்.27) என்னும் பாடல் அறிவிக்கிறது

, | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07052026

இப்பாடலில் சேரர் சோழர் பாண்டியர் வடநாட்டு மன்னர்கள் முதலியார் நந்தி வர்மனைப் பணிந்து திறைப்பொருள்களைக் கொடுத்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. போரில் பெற்ற திறைப் பொருள்களை எல்லாம் நந்திவர்மன் இரவலர்களுக்கு கொடுக்கும் மனம் உடையவனாக விளங்கினான். "வீர மாமத கரியிவை பரியிவை இரவலர் கவர்வாரே " (மேலது.27) "நந்திவர்மனுக்குத் திறைப் பொருள் கொடுத்துப் பிழைப்பவர்கள் மட்டுமே தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள இயலும் மற்றவர்கள் போரில் அழிவது உறுதி என்பதை இலக்கியம் தெளிவுபடுத்துகிறது" (மேலது. 68). நந்திவர்மன் படையெடுத்துச் செல்வதற்கு முன்பு வளமாக இருந்த நாடுகள் எல்லாம் அடையாளம் காண இயலாத அளவு அழிவெய்தியதை, "ஊரும் அரவமும் தாமரைக்காடும் உயர்வனமும் / தீரும் உடைத்தென்பர் சீறாத நாள் நந்தி சீறிய பின்பு / ஊரும் அரவமும் தாமரைக் காடும் உயர் வளமும் / தேரும் உடைத்தென்ப ரே தெவ்வர் வாழுஞ் செழும்பதியே " (மேலது. 94) என்னும் பாடல் விளக்குகிறது. இப் பாடலில் நந்திவர்மன் போர் செய்வதற்கு முன்பு பகை நாடுகள் மக்களால் உண்டாகும் ஒலி, தாமரை மலர்ந்த நீர்நிலைகள், அழகிய சோலைகள், தேர்கள ◌ முதலியவற்றை கொண்டு விளங்கின. அவன் படையெடுத்த பின்பு அவ்வூர்கள் அழகுடையன என்று யாரும் கூற மாட்டார்கள் என்னும் செய்தி பெறப்படுவதால் நந்திவர்மன் படையெடுப்பால் பகைநாட்டில் ஏற்பட்ட அழிவு விளங்கும். மன்னனின் சிறப்பைக் கூறிப் பகைநாட்டின் அழிவுக்காக இரங்கும் காரணத்தால் இதனைக் கொற்றவள்ளைத் துறையாகக் கொள்ளலாம். .நந்திவர்மன் கங்கர் சாளுக்கியர் சேரர் சோழர் பாண்டியர் முதலிய மன்னர்களைப் படையெடுத்து வென்ற செய்தி இலக்கியத்தின் வாயிலாக அறியப்படுகிறது. இதனை, "தென்னல் தொண்டி நகரங்கைப் படுத்த பிரான் " (மேலது 38: 3 - 4) "செம்பியர் தென்னர் சேரர் எதிர் வந்து மாயச் செருவென்ற பாரி முடிமேல் / வம்புயர் தொண்டை காணும் மடமாதர் தங்கை வளை கொண்ட தென்ன வலமே" (மேலது. 81: 3 - 4) என்னும் சான்றுகள் விளக்கும். இலக்கியத்தில் நந்திவர்மன் குருக்கோட்டை◌ எனப்படும் திருவிஞ்சைக்களம் தொண்டி தெள்ளாறு வெள்ளாறு கடம்பூர் பழையாறு ஆகிய இடங்களில் செய்த போர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதனை "கோமறுகில் சீறிக் குருக்கோட்டை வென்றாடும் நந்தி " ( மேலது 2: 3; 16: 3 ) விரவாத மன்னரெல்லாம் விண்ணேற வெள்ளாற்று வெகுண்டோன் " ( மேலது. 19:1) " இகல் கொண்டார் இருங் கடம்பூர் விசும்புக் கேற்றி " (மேலது.25:3) "சேரரும் சோழரும் தென்னரும் வடபுலத் தரசரும் திறை தந்த " (மேலது.27:3) "அமரில் தென்னாற்று அஞ்சிய நெஞ்சத்து " (மேலது. 28:3) "படையாறு சாயப் பழையாறு வென்றான்" (மேலது. 31:3) என்னும் சான்றுகள் விளக்கும்.

**கொடைப் பண்பு**

நந்திவர்மன் தன்னை நாடி வரும் புலவர்களையும் இரவலர்களையும் காக்கும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

பண்புடையவனாக விளங்கினான். போர்க்களத்தில் அவன் பெற்ற வெற்றியை புகழ்ந்து பாடும் புலவர்களுக்குப் போர்க்களத்திலேயே கொடை வழங்கும் உயரிய மனம் உடையவனாக விளங்கினான் என்பதைப் பாடல் சான்றுகள் மூலமாக அறிய முடிகிறது. குறிப்பாக நந்திவர்மன் குறித்த பாடல்களில் இடம்பெறும் கொடை குறித்த செய்திகள் சங்க இலக்கியக் கொடை மரபின் தொடர்ச்சியாக விளங்குகின்றன. இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள புறத்துறைகள் பலவும் ஆற்றுப்படை இலக்கியங்களில் அமைந்து வரும் பண்டைய மன்னர்களின் கொடைப் பண்பை நினைவூட்டுவனவாக விளங்குகின்றன. இதனை,

உரை வரம்பு இகந்த உயர்புகழ்ப் பல்லவன்
அரசர் கோமான் அடுபோர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவேல் உயர்வு பாடினன் கொல்லோ
நெருநல் துணியரைச் சுற்றிப்
பரடு திறப்ப தன்னால் பல்கடைத்
திரிந்த பாணன் நறும்தார் பெற்றுக்
காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்
புதுப்பூப் பொலன்கலன் அணிந்து
விளங்கு ஒளி ஆனனன் இப்போது
இளம்களி யானை எருத்தம்மிசை அன்னே (மேலது. 23)

என்னும் பாடலால் அறியலாம். இப்பாடலில் பாணனின் வறுமை நிலையும் நந்திவர்மன் வழங்கிய கொடையால் அவன் வறுமை நீங்கிய விதமும் விளக்கப்படுகிறது. கிழிந்த ஆடையை அணிந்த ப ாணன் வறுமையிலும் பசியிலும் தளர்ந்து வருத்தம் கொண்டு நந்திவர்மனைப் பாடிய காரணத்தால் புதிய ஆடைகளையும் புதிய அணிகலன்களையும் அணிந்து முகத்தில் புதிய ஒளி உண்டாகப்பெற்று நந்திவர்மன் கொடையாகக் கொடுத்த யானையின் மீது அமர்ந்து பயணிக்கிறான் என்று கூறப்படுவதால் சாதாரண மக்களுடைய வறுமையை போக்கும் உயரிய மனம் உடையவன் நந்திவர்மன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. "நந்திவர்மன் த ான் செய்யும் போர்களில் பகை மன்னர்கள் கொடுத்த திறைப் பொருள்களைக் கொடையாக வழங்கும் இயல்புடையவனாக விளங்கினான் " (மேலது .27) வறுமையால் வாடியவர்களும் நாட்டை ஆளும் மன்னர்களாகும் அளவு வளம் பெற முடியும் என்பதை இலக்கியம் தெளிவுப்படுத்துகிறது. "இந்தப் புவியில் இரவலர் உண்டென்ப தெல்லாம் / அந்தக் குமுதமே அல்லவோ - நந்தி / தடங்கைப்பூ பாலன் மேல் தன்கோவை பாடி / அடங்கப்பூ பாலரா னார்" (மேலது. 91) நந்திவர்மனின் கொடைப்பண்பை அறிய இலக்கியத்தில் அமையும் பல பாடல்களும் அகச் சான்றுகளாக அமைகின்றன. இதனை,

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm07052026*

வனைவார் குழல் வேணியும் வாடை கணீர்
நனைவார் துகிலும் இவை நாளும் இரா
வினைவார் கழல் நந்தி விடேல் விடுகின்
கணையார் முரசொத்தது கார திர்வே (மேலது. 13)
ஏழை மார்துணை வாழி நந்தி தண்
நீழல் வெண்குடை ஊழி நிற்கவே (மேலது. 21)
நல◌ும் நந்தி நானிலம் காவலன் (மேலது. 59:1)
செங்கை முகில் அனைய கொடைச் செம்பொன் பெய் மேகத்
தியாகி யெனும் நந்தி (மேலது. 99: 3)

என்னும் பாடல் ச◌ான்றுகள் விளக்கும். மேற்கண்ட சான்றுகளில் நந்திவர்மன் வறுமையால் வாடும் புலவர்களை ஆதரித்தல் ஏழைகளுக்குத் துணையாக இருத்தல் இரவலர்களுக்குக் கொடுத்து உதவுதல் முதலான பண்புகள் விளக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

கலம்பக இலக்கியங்களில் முதலாவதாகப் படைக்கப்பட்ட நந்திக்கலம்பகம் வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகக் கொண்ட கலம்பகம◌ாக விளங்குகிறது. மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட இவ்விலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கலம்பக உறுப்புகள் பாட்டுடைத் தலைவனைச் சிறப்பிக்கும் நோக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக நந்திவர்மன் குறித்த செய்திகள் பாடாண் திணையில் அமைந்து அவனுடைய புகழ் கொடை வீரம் ஆகிய பண்புகளை விரிவான நோக்கில் தெளிவுபடுத்தியுள்ளன. தொண்டை நாட்டை இடமாகக் கொண்டு ஆட்சி செய்த நந்திவர்மன் பல்வேறு போர்களில் வெற்றி பெற்றதையும் சிறந்த வீரப் பண்புடையவனாக விளங்கியதையும் கொடைப் பண்பால் இரவலர்களின் வறுமையைப் போக்கியதையும் பாடல்கள் தெளிவுபடுத்தியுள்ளன.

**துணை நூற் பட்டியல்**

[1]. கண்ணன் இரா, சிற்றிலக்கிய ஆராய்ச்சி (தொகுதி - 1 ) சென்னை: அப்பர் பதிப்பகம், 2002
[2]. கதிர்முருகு, நத்திக் கலம்பகம் மூலமும் உரையும், சென்னை : சீதை பதிப்பகம், 2006
[3]. மேலது, திறனாய்வு தோக்கில் நந்திக்கலம்பகம், சென்னை: ராமையா பதிப்பகம், 2007
[4]. மேலது, புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம், 2009
[5]. கேசிகன் புலியூர், தொல்காப்பியம், சென்னை: பாரி நிலையம், 2001
[6]. விமலானந்தம் மது.ச., தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை: அபிராமி பதிப்பகம், 2002